ஒட்டன்சத்திரம் நகராட்சி

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் அட்டவணை-III விதி எண்.2(2)ன் கீழ் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டமானது 20.06.2024 (வியாழக் கிழமை) அன்று முற்பகல் 11.00 மணியளவில் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற துணை தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது

ஒம்/- க.திருமலைசாமி
நகர்மன்றத் தலைவர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

நாள்.14.06.2024

| பொருள் எண் | மன்ற பொருள் | கூட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|
| 1 | தமிழக அரசின் சாலை மேம்பாட்டு திட்டம் 2021-2022-இன் படி ஒட்டன்சத்திரம் (நெ), க(ம)ப, உட்கோட்டத்தினை சர்ந்த மாநில சாலையான திண்டுக்கல் – கோயம்புத்தூர் – திம்மம் – பெங்களூர் சாலை ஒட்டன்சத்திரம் நகர் பகுதியில் கி.மீ 23/230 – 30/900 வரை சாலை விரிவாக்க பணிகள் மற்றும் மின்விளக்குகள் அமைக்கும் பணி நெடுஞ்சாலை துறையினரால் முடிக்கப்பட்டுள்ளது எனவே, ஒட்டன்சத்திரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நளன் உணவகம் முதல் குழந்தைவேலப்பர் கோயில் வரை திண்டுக்கல் பழனி தேசிய நெடுஞ்சாலையில் அமைக்கப்பட்டுள்ள புதிய சென்டர் மீடியா விளக்குகளுக்கு தேவையான புதிய மின் இணைப்பு வழங்க கேட்டுவிண்ணப்பிக்கப்பட்டதில், உதவி செயற்பொறியாளர் நகர்பிரிவு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், ஒட்டன்சத்திரம் அவர்களிடமிருந்து ,மேற்படி புதிய மின் இணைப்பு பெறுவதற்கு ஆகும் தொகை ரூ.45,295/-ஐ மட்டும் செலுத்த தெரிவித்து வரப்பெற்ற கேட்பு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி, மேற்படி பகுதியில் சென்டர் மீடியா விளக்குகளுக்கு தேவையான புதிய மின் இணைப்பு பெறுவதற்கும், அதற்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து பட்டியல் தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | **<u>தீர்மான எண். 130</u>**<br>அனுமதிக்கப்பட்டது |
| 2 | ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவக பயன்பாட்டிற்கு தேவையான இட்லி இரசீது புத்தகங்கள் , சாம்பார் சாதம் இரசீது புத்தகங்கள் மற்றும் தயிர் சாதம் இரசீது புத்தகங்கள்அம்மா உணவகத்திற்கு தேவைப்படுவதால் மேற்படி இரசீது புத்தகங்கள் அரசு சார்ந்த கூட்டுறவு அச்சகத்திடமிருந்து அச்சடித்து பெறுவதற்கும் , அதற்காகும் உத்தேச செலவினம் ரூ 2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். | **<u>தீர்மான எண். 131</u>**<br>அனுமதிக்கப்பட்டது |
| 3 | வடக்கிழக்கு பருவ மழை போதிய அளவு இல்லாததால் வறட்சி காரணத்தினால் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட அதிக வாய்ப்புள்ளதால், ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 முதல் 9 வார்டுகளில் குடிநீர் பற்றாக்குறையினை போக்கிடும் பொருட்டு, பொதுமக்களுக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாத வண்ணம் குடிநீர் தொடர்புடைய பணிகளை அவ்வபோது உடனுக்குடன் சரிசெய்யும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு | **<u>தீர்மான எண். 132</u>**<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td><u>அலுவலககுறிப்பு :-</u><br>குடிநீர் விநியோகப் பணியின் அவசர அவசியம் கருதி, ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதையும் அதற்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு நகராட்சி குடிநீர்நிதியிலிருந்துமேற்கொள்ளவும்மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>4</td><td>வடக்கிழக்கு பருவ மழை போதிய அளவு இல்லாததால் வறட்சி காரணத்தினால் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட அதிக வாய்ப்புள்ளதால், ஒட்டன்சத்திரம் நகராட்சி 10 முதல் 18 வார்டுகளில் குடிநீர் பற்றாக்குறையினை போக்கிடும் பொருட்டு, பொதுமக்களுக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாத வண்ணம் குடிநீர் தொடர்புடைய பணிகளை அவ்வபோது உடனுக்குடன் சரிசெய்யும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டமதிப்பீட்டுதொகை ரூ.5.00 இலட்சம்மன்றத்தின் அனுமதிக்கு<br><u>அலுவலககுறிப்பு :-</u><br>குடிநீர் விநியோகப் பணியின் அவசர அவசியம் கருதி, ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டுநகராட்சி குடிநீர் நிதியிலிருந்துமேற்கொள்ளவும்மன்றம் அனுமதிக்கலாம்.</td><td><u>தீர்மான எண். 133</u><br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>5</td><td>ஒட்டன்சத்திரம் நகராட்சி அரசாணை (நிலை ) எண் .181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4)துறை , நாள் .19.09.2008-இன்படி , இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள தென்னை மற்றும் இளவ மரங்கள் மற்றும் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள தென்னை மரங்களின் மேல் மகசூல் குத்தகை உரிமை பொதுஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு 31.03.2024ம் நாளுடன் இரண்டாண்டுகள் முடிவுற்று மூன்றாம் ஆண்டு புதுப்பிக்க கோரி அறிவிப்பு செய்யப்பட்டதில், இரண்டு ஆண்டுகளில் நஷ்டம் ஏற்பட்டதை தொடர்ந்து புதுப்பிக்க விருப்பமில்லை என தெரிவித்து திருகே.சுந்தரராஜன் குத்தகைதாரரிடமிருந்து வரப்பெற்ற கடிதத்தினை எற்று, தீர்மான எண்.122, நாள்.05.03.2024ல் நகர்மன்றத்தால் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 01.04.2024 முதல் மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமை 15.03.2024ல் பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஒப்பந்தப்புள்ளிகள்வரப்பெற்ற விவரம் கீழ்கண்டவாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி</th><th>ஏலதாரர்கள் விவரம்</th><th>ஏலத் தொகை</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td rowspan="2">15.03.2024</td><td>திரு.கே.வடிவேல் ,<br>த/பெ.குமரவேல்,<br>அரசப்பிள்ளைப்பட்டி ,<br>ஒட்டன்சத்திரம்</td><td>-</td><td>9,000/-</td></tr>
<tr><td>2</td><td>திரு.அ.முத்துராஜ் ,<br>த/பெ.அழகியனகவுண்டர் ,<br>தாசிரிபட்டி , சத்திரப்பட்டி ,<br>ஒட்டன்சத்திரம்</td><td>-</td><td>9,100/-</td></tr>
</table>
மேற்காணும் இனத்திற்கு 15.03.2024ம் நாளைய பொதுஏலத்தில் எவரும் கலந்துகொள்ளாத நிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு மட்டும் வரப்பெற்றது. இரண்டு ஒ ப்பந்தப்புள்ளியில் வரிசை எண் 2-ல் உள்ள திருஅ.முத்துராஜ், த/பெ.அழகியனகவுண்டர், தாசிரிபட்டி, சத்திரப்பட்டி என்பவரால் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ 9,100/-க்கு திருஅ.முத்துராஜ், த/பெ.அழகியனகவுண்டர், தாசிரிபட்டி, சத்திரப்பட்டி என்பவரால் கோரப்பட்ட அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினைமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்</td><td><u>தீர்மான எண். 134</u><br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

**அலுவலககுறிப்பு** :

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் உட்சபட்ச தொகையாக ரூ. 9,100/-க்கு வரப்பெற்ற திரு.அமுத்துராஜ், த/பெ.அழகியனகவுண்டர், தாசிரிபட்டி, சத்திரப்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

6

ஒட்டன்சத்திரம் நகராட்சி பேருந்து நிலையம் புதுப்பித்தலுக்கு பைப் லைன்களுடன் கூடிய குடிநீர் டேங்க், மின்சாதனங்கள், பெயர் பலகை, கால அட்டவணை மற்றும் இதர பழுது பணிகளுக்கு 05.03.2024-ல் நகர்மன்ற தலைவர் அவர்களால் முன்அனுமதி ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, மேற்படி பணிக்காக 08.03.2024-இல் குறுகியகால விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | பணி விவரம் | சூர்யா கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் | திரு.வி.குணசேகரன், ஒப்பந்ததாரர், ஒட்டன்சத்திரம் | ஜி.வி.கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் |
|---|---|---|---|---|
| 1 | Water closet | 5350 | 5200 | 5300 |
| 2 | Gate value with pipe line | 2000 | 1830 | 1900 |
| 3 | 36 W CFL Light Busstand &amma unavagam | 750 | 678 | 730 |
| 4 | Switch point | 1420 | 1300 | 1350 |
| 5 | RO service | 3500 | 2900 | 3200 |
| 6 | Fridge Service | 12000 | 8750 | 10000 |
| 7 | 1000 Lits Sintex | 8700 | 8100 | 8550 |
| 8 | Tank Stand | 11000 | 9500 | 10000 |
| 9 | Supply and providing of 1.5 sq.mm. copper flexible cable | 22 | 19 | 20 |
| 10 | Busstand Name Board Repair work painting work (25x6) | 1450 | 12000 | 1350 |
| 11 | Busstand in and out Name Board | 8900 | 8600 | 8700 |
| 12 | Rolling Shutter Repair Work | 2750 | 2200 | 2250 |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.வி.குணசேகரன், ஒட்டன்சத்திரம் என்பவரின் விலை விகிதம் குறைவாக உள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலககுறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, குறைவான விலை விகிதம் அளித்துள்ள திரு.வி.குணசேகரன், ஒட்டன்சத்திரம் என்பவரின் விலை விகிதத்தை ஏற்று, பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்துமேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 135**

அனுமதிக்கப்பட்டது.

7

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 2022-2023 மற்றும் 2023-2024-ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பந்ததாரர் மூலம் பிடித்தம் செய்யப்பட்ட சரக்கு மற்றும் சேவைவரி (GST) மற்றும் வருமானவரி (Income Tax)-ஐ வரவு செய்து Statement மாதத்திற்கு ஒரு முறை தயார் செய்ய வேண்டியுள்ளது. மாதத்திற்கு ஒரு முறை பிடித்தம் செய்யப்பட்ட தொகையினை வரவு செய்து முடிப்பதற்கு அவசர அவசியம்

**தீர்மான எண். 136**

அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | கருதி, தனியார் பட்டயக் கணக்கர் மூலம் கணினியில் தயார் செய்ய கன்சல்டன்சி மூலம் மேற்கொள்வதற்காக செலவினத் தொகை ரூ.1,26,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு<br>**<u>அலுவலககுறிப்பு</u>:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. 2022-2023 மற்றும் 2023-2024-ஆம் ஆண்டுகளுக்கான மாத வரவினங்கள் தயார் செய்துசெலுத்த வேண்டியுள்ளதால், அவசர அவசியம் கருதி,மேற்படி மாத வரவினங்கள் முடிப்பதற்கான பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் | |
| 8 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.1827/2022/EA-2,நாள். 15.12.2023-இல், 15-வது மத்திய நிதிக்குழு மானியம் 2022-2023ஆம் நிதியாண்டிற்கான Tied Grant & Untied Grant ஒதுக்கீட்டின் கீழ் தொகை ரூ. 35.20 இலட்சம் மதிப்பீட்டில் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு Backhoe loader வாகனம் கொள்முதல் செய்துகொள்ள நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து ,நகர்மன்ற தீர்மான எண்.39, நாள்.09.01.2024-இல் அனுமதி பெற்று, 24.01.2023-இல் மா வட்ட அளவில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியீடு செய்ய செய்தி மக்கள் தொடர்பு துறை, திண்டுக்கல் வாயிலாக கோரப்பட்டதில் 30.12.2023-ஆம் நாளைய தினமணி தினசரி நாளிதழில் விளம்பரம் வெளியீடு செய்தமைக்காக, மேற்படி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 15,271/-மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மேற்படி திட்டத்தின் கீழ் Backhoe loader வாகனம் கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மா வட்ட அளவில் இயக்குநர் ,செய்தி விளம்பரத் துறை, திண்டுக்கல் அவர்களின் வெளியீட்டு ஆணை எண் 365/செமதொஅ/திண்டுக்கல்/2023 நாள்.29.12.2023-இன்படி, தினசரி நாளிதழில் விளம்பர வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகையினை 2023-2024-ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்படி நிறுவனத்திற்கு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். | **<u>தீர்மான எண். 137</u>**<br>அனுமதிக்கப்பட்டது. |
| 9 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில், ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு திட்ட நிதிகள் பெற்று தந்தமைக்கும் ,முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாபெரும் இலவச சிறப்பு மருத்துவ முகாம், முதல்வரின் முகவரி மக்களுடன் முதல்வர் முகாம், தைப்பூசத்திருவிழா மற்றும் மேற்படி அரசின் திட்டங்கள் மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை 22.10.2023, 29.11.2023, 02.12.2023, 27.12.2023, 05.03.2024 மற்றும் 09.03.2024ஆகிய தினங்களில் நகர்மன்றத்தின் சார்பாகதமிழ்நாடு அரசின் சாதனையாக விளம்பர வெளியீடு செய்த வகையில், வரப்பெற்ற பட்டியல் தொகையை கீழ்க்காணும் நாளிதழ்கள் நிறுவனங்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு | **<u>தீர்மான எண். 138</u>**<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>
<table>
<tr><th>வ.எண்</th><th>நாளிதழ் பெயர்</th><th>வெளியீடு செய்த நாள்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>மக்கள் குரல் நாளிதழ்</td><td>22.10.2023</td><td>9975</td></tr>
<tr><td>2</td><td>தினத்தந்தி நாளிதழ்</td><td>29.11.2023</td><td>47643</td></tr>
<tr><td>3</td><td>தினத்தந்தி நாளிதழ்</td><td>02.12.2023</td><td>23100</td></tr>
<tr><td>4</td><td>தினசூரியன் நாளிதழ்</td><td>02.12.2023</td><td>9975</td></tr>
<tr><td>5</td><td>தினமணி நாளிதழ்</td><td>27.12.2023</td><td>5040</td></tr>
<tr><td>6</td><td>உரிமை குரல் நாளிதழ்</td><td>05.03.2024</td><td>9800</td></tr>
<tr><td>7</td><td>தினயுகம் நாளிதழ்</td><td>09.03.2024</td><td>9912</td></tr>
<tr><td>8</td><td>செய்தி அலசல் நாளிதழ்</td><td>09.03.2024</td><td>12750</td></tr>
<tr><td>9</td><td>மாலை மலர் நாளிதழ்</td><td></td><td>16200</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு</u> :-<br>
இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை விளம்பரவெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகையினை, நாளிதழ் நிறுவனங்களுக்கு வழங்கவும், அதற்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம் .
</td><td></td></tr>
<tr><td>10</td><td>
ஒட்டன்சத்திரம் நகராட்சியின் 2024-2025-ஆம் ஆண்டிற்கான எழுது பொருட்கள் கொள்முதல்செய்து அலுவலக இருப்பில் வைக்கப்படவேண்டியுள்ளது இந்நகராட்சி பணியாளர்களின் எழுது பொருட்களின் தேவைப்பட்டியலில் காணும் விவரத்திற்கு உரிய எழுது பொருட்களை அரசாணை நிலை எண்.330 தொழில்துறை நாள்.03.05.1991 இன் படி விலைப்புள்ளி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோராமல் நேராடியாக மாவட்ட அச்சக சேவை தொழில் கூட்டுறவு சங்கம் லிட் நிறுவனங்களில்கொள்முதல் செய்து கொள்ள அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது<br>
மேலும் சென்னை நகராட்சி நிர்வாக இணை ஆணையர் (நிர்வாகம்) அவர்களின் கடிதம் C.No.29968/2012/OP3நாள்.30.12.2013-இன்படி நகராட்சிக்கு தேவையான அனைத்து விதமான பொருட்களையும் அரசு கூட்டுறவு நிறுவனங்களில்கொள்முதல் செய்துகொள்ளபரிந்துரை செய்யப்பட்டுள்ளது<br>
மேற்காணும் அனுமதிகளுக்கிணங்க 2024-2025 ஆம் ஆண்டிற்கான காகிதங்கள், கணிணி அச்சு இயந்திரங்களுக்கு தேவையான டோனர்கள்,பதிவேடுகள்,மூடுதாள்கள்,அளவு புத்தகங்கள் உள்ளிட்ட பொருட்களை மாவட்ட அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட் மூலம் பதிவு செய்துள்ள நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்துகொள்வதற்கும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ.5.00 இலட்சத்திற்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br>
<u>அலுவலககுறிப்பு</u> :<br>
இந்நகராட்சிக்கு தேவையான எழுது பொருட்கள் கொள்முதல் செய்வதற்கும் அதற்கான உத்தேச செலவீனம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
</td><td><u>தீர்மான எண். 139</u><br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>11</td><td>
அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.24.06.2022 மற்றும் அரசாணை (நிலை) எண்.93, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.24.06.2022. தமிழ்நாடு அரசிதழ் எண்.358, நாள்.24.06.2022 நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை
</td><td><u>தீர்மான எண். 140</u><br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>அவர்களின் கடிதம் நக.எண்.24470/2022/MA2, நாள்.27.07.2022 மற்றும் 08.08.2022 நகர்மன்ற தீர்மான எண்.270, நாள்.20.10.2022-இன்படி, ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 முதல் 18 வார்டுகளில் (வார்டு குழு மற்றும் பகுதி சபா) 18 வார்டுகள் 72 பகுதி சபைகளாக வரையறை செய்யப்பட்டது இந்நகராட்சி 1 முதல் 18 வார்டுகளில் 25.01.2024 முதல் பகுதி சபா கூட்டங்கள் நடத்தப்பட்டது. மேற்படி நாளில் பகுதி சபா கூட்டங்களுக்கு தேவையான 6 x 4 அளவில் பிளக்ஸ் போர்டு 18 எண்ணம் அச்சடித்து கொடுத்தமைக்காக கருடா ஸ்டிக்கர், ஒட்டன்சத்திரம் நிறுவனத்திடமிருந்துவரப்பெற்றபட்டியல் தொகைரூ.8,640/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு<br><br><u>அலுவலக குறிப்பு</u><br>பணியின் அவசர அவசியம் கருதியும் ,பொதுமக்களின் நலன் கருதிமேற்படி நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொண்டமைக்கு மேற்படி நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்கியதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>12</td>
<td>ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு நமக்கு நாமே திட்டம் 2023-2024-இன் கீழ்-வது வார்டு வசந் த் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணிக்கு ரூ.100.00 இலட்சம் மற்றும் 5-வது வார்டு சத்யா நகர் பகுதியில் சமுதாயகூடம் கட்டுதல் பணிக்கு ரூ.100.00 இலட்சத்தில்பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.4549/2023/பி2, நாள்.15.11.2023 மற்றும் 07.02.2024-இல் நிர்வாக அனுமதி வழங்கியதை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர், மதுரை அவர்களின் செயலமுறை உத்தரவு ந.க.எண்.4549/2023/பி2, நாள்.17.11.2023 மற்றும் 08.02.2024-ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது.<br><br>அதனை தொடர்ந்து, மேற்படி திட்டப்பணிகளுக்கு 29.12.2023 மற்றும் 23.02.2024-ம் ஆகிய தேதிகளில் மாநில அளவில் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியீடு செய்ய , செய்தி மக்கள் தொடர்பு துறை, சென்னை வாயிலாக 20.12.2023 மற்றும் 10.02.2024 ஆகிய நாட்களில் கீழ்க்காணும் நிறுவனங்கள் மூலம் விளம்பர வெளியீடு செய்தமைக்காகவும், மேற்படி நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை வழங்க கேட்டு வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ. எண்</th><th>விளம்பரம் செய்யப்பட்ட நிறுவனத்தின்பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி நாள்</th><th>நாளிதழ்கள் வெளியான விவரம்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>Ravi Publicity Service, Chennai</td><td>29.12.2023</td><td>தினமணி மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் தினசரி நாளிதழ்கள்</td><td>90562</td></tr>
<tr><td>2</td><td>Adwave advertising Private ltd</td><td>23.02.2024</td><td>மாலை முரசு மற்றும் பினான்சியல் எக்ஸ்பிரஸ் தினசரி நாளிதழ்கள்</td><td>23678</td></tr>
</table>
</td>
<td><u>தீர்மான எண். 141</u><br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அலுவலககுறிப்பு :-**<br>மேற்படி திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ள மின் னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாநில அளவில் இயக்குநர் , தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தி (விளம்பர )த் துறை , சென்னை அவர்களின் வெளியீட்டு ஆணை எண்.6704/ஒப்பந்தப்புள்ளி /விளம்பரம்/2023, நாள். 19.12.2023 மற்றும் வெளியீட்டு ஆணை எண். 846/ஒப்பந்தப்புள்ளி /விளம்பரம்/2024, நாள். 09.02.2024-இன்படி விளம்பர வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகையினை , மேற்படி நிறுவனங்களுக்கு வழங்கவும், அதற்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு நகராட்சி வருவாய்நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 13 | மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் கடித ந.க.எண்.963399/2023/இ1, நாள்.21.09.2023-ல் வடகிழக்கு பருவமழை - 2023 முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கை துவங்கவுள்ள நிலையில், முன்னேச்சரிக்கையாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள பணிகள் குறித்து 25.09.2023-ல் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. மேற்படி ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டதை தொடர்ந்து, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கையாக மணல் மூட்டைகள், ஜெ.சி.பி வாகனம் மற்றும் மரம் அறுவை இயந்திரங்கள் போன்ற பணிகள் மேற்கொண்டமைக்காக சரவணா பில்டர்ஸ், கமாட்சிபுரம் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.47,500/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**அலுவலககுறிப்பு:**<br>வடகிழக்கு பருவமழை பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொண்டமைக்கு, மேற்படி நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்கியதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 142**<br>அனுமதிக்கப்பட்டது. |
| 14 | ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் (SBM (U) 2.0) 2022-2023-இன் கீழ் 6-வது வார்டு பழனிக்கவுண்டன் புதூர் நவீன எரிவாயு தகன மேடை பின் பகுதியில், ஒருங்கிணைந்த மலக்கசடு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு ரூ.552.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.9192/2022/SBM-1, நாள்.09.02.2024-இல் நிர்வாக அனுமதி வழங்கியதை தொடர்ந்து, முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் செயலமுறை உத்தரவு ந.க.எண்.18484/2023/டி.ஓ1, நாள்.16.02.2024-ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது.<br>அதனை தொடர்ந்து மேற்படி திட்டப்பணிகளுக்கு 29.02.2024-ம் ஆகிய தேதியில் மாநில அளவில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோர ஒப்பந்தப்புள்ளி அறிவி வெளியீடு செய்ய செய்தி மக்கள் தொடர்பு துறை , சென்னை வாயிலாக 17.02.2024-ம் நாளில் மாலை முரசு மற்றும் டெக்கான் குரோனிக்கல் ஆகிய தினசரி நாளிதழ்களில் | **தீர்மான எண். 143**<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | Moulis Advertising Service Pvt.Ltd, Chennai நிறுவனம் மூலம் விளம்பர வெளியீடு செய்தமைக்காகவும், மேற்படி நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை ரூ.68,859/- மட்டும் வழங்க கேட்டு வரப்பெற்றுள்ளதுமன்றத்தின் அனுமதிக்கு<br>**<u>அலுவலககுறிப்பு :-</u>**<br>மேற்படி திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ள மின் னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாநில அளவில் இயக்குநர் , தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தி (விளம்பர )த் துறை , சென்னை அவர்களின் வெளியீட்டு ஆணை எண்.1045/ஒப்பந்தப்புள்ளி /விளம்பரம்2024, நாள். 16.02.2024-இன்படி விளம்பர வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகையினை , மேற்படி நிறுவனத்திற்கு வழங்கவும், அதற்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு நகராட்சி வருவாய் நிதியிலிருந்துமேற்கொண்டதையும்மன்றம் அனுமதிக்கலாம். | |
| 15 | ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 2022-2023 ஆம் ஆண்டிற்கு தணிக்கை நடைபெற்றதில் தணிக்கைக்கு காண்பிக்க தேவைப்படும் 1 முதல் 18 வார்டுகள் குடிநீர் கட்டணம் நடப்பு கேட்பு பதிவேடுகள் மற்றும் நிலுவை கேட்பு பதிவேடுகள் பிரிண்ட் எடுத்து பைண்டிங் செய்து ஒப்படைத்தமைக்கும் மற்றும் 2023-2024-ஆம் ஆண்டிற்கான வசூல் பணி மேற்கொள்ள குடிநீர் கட்டணம் கேட்பு அறிவிப்புகள் பிரிண்ட் எடுத்தமைக்காகவும் மற்றும் பொறியியல் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட அரசின் சிறப்பு திட்டப்பணிகளுக்கானதிட்ட மதிப்பீடுகள் தயார் செய்ய தேவையான எழுதுபொருட்கள், கலர் பிரிண்டுகள், பைண்டிங் செய்துகொடுத்தமைக்காகதன்யா ஸ்டோர்ஸ், கிப்ட் அன்டு ஸ்டேசனரிஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.19,015 மற்றும் ரூ.59,452/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**<u>அலுவலககுறிப்பு:</u>**<br>தணிக்கை மற்றும் வசூல் பணியின் அவசர அவசியம் கருதி , மேற்படி நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொண்டமைக்கு, மேற்படி நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்கியதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | **<u>தீர்மான எண். 144</u>**<br>அனுமதிக்கப்பட்டது |
| 16 | மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவை விதி எண்.110-இன் கீழ் 15.05.2013 அன்று வெளியிட்ட அறிவிப்பின்படியும், அரசாணை (பத்தாண்டு) எண்.21, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1 ) துறை, நாள்.17.01.2013, அரசாணை (நிலை) எண்.79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந 2) துறை, நாள்.31.05.2013 மற்றும் அரசாணை (நிலை) எண்.118, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந)துறை, நாள்.26.09.2014-இன்படியும், அம்மா உணவகம் பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி உணவகத்தில் விற்பனை செய்யப்படும் உணவுப்பொருள்களுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில் அரசாணைகளில் ஆணையிடப்பட்டுள்ளவாறு 2024-2025-ஆம் ஆண்டிற்கான (தேவைப்படும் டோக்கன்களை கூட்டுறவு அச்சகம் வாயிலாக அச்சடித்துப் பெறவும், மேற்படி | **<u>தீர்மான எண். 145</u>**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | உணவகத்திற்கு தேவையான உணவு பொருட்கள் அரசாணைகிளில் ஆணையிடப்பட்டுள்ளவாறு(1) மளிகைப் பொருட்கள் விநியோகம் செய்ய மேலாளர், அபிராமி கூட்டுறவு பண்டக சாலை, திண்டுக்கல் (2) மான்ய விலையில் அரிசி விநியோகம் செய்ய மண்டல துணை இயக்குநர், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, திண்டுக்கல், (3) உணவகத்திற்கு தேவையான தயிர் தினசரி விநியோகம் செய்ய பொது மேலாளர், மாவட்ட கூட்டுறவு பால் வள ஒன்றியம், திண்டுக்கல் மற்றும் (4) அன்றாடம் தேவைப்படும் காய்கறி வகைகளை வெளிச்சந்தையில் அன்றைய விலையில் கொள்முதல் செய்து கொள்ளவும், (5) மேற்படி, உணவக வளாகத்தினை தூய்மையாக வைத்திருக்க தேவையான இதர பொருட்களை கொள்முதல் செய்துகொள்ளவும் (6) மேற்படி உணவகத்திற்கு தேவையான கேஸ் சிலண்டர்களை பாரத் பெட்ராலியம் லிமிடெட் கிளை நிறுவனமான, வேல் பாரத் கேஸ் ஏஜென்சீஸ், ஒட்டன்சத்திரம் மூலம் தேவைக்கேற்ப வாங்கிக்கொள்ளவும் மேலும், உணவகத்தில் பணிபுரியும் அன்னை அஞ்சுகம் மகளிர் சுய உதவிக்குழு 12 பணியாளர்களுக்கு தினக்கூலி விகிதத்தில் கூலி முதலான செலவினங்களை 2024-2025-ஆம் ஆண்டிற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்துமேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு<br>**<u>அலுவலககுறிப்பு</u>** :<br>மன்றம் அனுமதிக்கலாம் | |
| 17 | ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 முதல் 18 வார்டுகளில் பொதுமக்கள் அன்றாட இதர உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் மினிபவர் பம்ப் 180 எண்ணம் (15 ஹச்.பி, 7.5 ஹச்.பி, 5ஹச்.பி மற்றும் 1.5ஹச்.பி) மற்றும் தலைமை நீரேற்று நிலையத்தில் இயங்கி வரும் மின்மோட்டார்களில் அவ்வபோது ஏற்பட்டு வரும் மினி பவர் பம்ப் பழுதினை நீக்கிட தேவையான உதிரி பாகங்கள் சப்ளை செய்து பொருத்துதல் மற்றும் ஆழ்குழாய் கிணற்றிலிருந்துமின்மோட்டார்களை ஏற்றி இறக்குதல் போன்ற பழுது பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலககுறிப்பு</u>** :-<br>பணியின் அவசர அவசியம் கருதி, ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் அதற்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு நகராட்சி குடிநீர்நிதியிலிருந்துமேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | **<u>தீர்மான எண். 146</u>**<br>அனுமதிக்கப்பட்டது |
| 18 | ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய ஐ.டி.எஸ்.எம்.டி கடை எண்.12 மற்றும் பேருந்துநிலைய புதிய கடை எண்.11 ஆகிய கடைகளை குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்த கீழ்க்காணும் உரிமையாளர்களால் மேற்படி கடைகளை பொதுஏலம் எடுத்து நடத்தி வந்த நிலையில், மேற்படி கடைகளை வியாபாரம் சரியாக இல்லாத நிலையில் பெரும் நஷ்டம் ஏற்பட்டதன் காரணமாக மேற்படி கடைகளை 31.03.2024ம் நாளுடன் வாடகை மற்றும் மின்கட்டணம் நிலுவையின்றி செலுத்தி நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக எழுத்து பூர்வமாக வரப்பெற்ற விண்ணப்பம்கீழ்க்கண்டவாறு | **<u>தீர்மான எண். 147</u>**<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்</th><th>கடை எண்</th><th>பெயர்</th><th>விண்ணப்பம் வரப்பெற்றநாள்.</th></tr>
<tr><td>1</td><td>பேருந்துநிலைய ஐ.டி.எஸ்.எம்.டி கடை எண்.12 (முதல்தளம்)</td><td>திரு.டி.நாகராஜ்</td><td>27.03.2024</td></tr>
<tr><td>2</td><td>பேருந்துநிலைய புதிய கடை எண்.11</td><td>திரு.ஆர்.முருகன்</td><td>27.03.2024</td></tr>
</table>
மேற்படியார்களால் ஒப்படைப்பு செய்யப்பட்ட கடைகள் பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகோர மன்றத்தின் அனுமதிக்கு<br>
<u>அலுவலககுறிப்பு:</u><br>
அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.4), நாள்.03.07.2007-ன்படி, மேற்படி பேருந்துநிலைய ஐ.டி.எஸ்.எம்.டி கடை எண்.12 மற்றும் புதிய கடை எண்.11-ஐ பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான நடவடிக்கைகள் தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>19</td>
<td>
ஒட்டன்சத்திரம் நகராட்சி 2-வது வார்டு நாகணம்பட்டி முதல் பொன்னகரம் செல்லும் சாலையில் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு தொகை ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள , 09.01.2024-இல் நகர்மன்ற தீர்மான எண்.31-ல், ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து , மேற்படி பணிக்காக 15.03.2024-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.பி.வேலுச்சாமி</td><td>0.21% மதிப்பீட்டு விலையில் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.பாலசுப்பிரமணியன்</td><td>1.91% மதிப்பீட்டு விலையில் கூடுதல்</td></tr>
</table>
மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து டேவணித் தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.பி.வேலுச்சாமி ஒப்பந்ததாரரின் 0.21% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
மேற்படி பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.21% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.வேலுச்சாமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று, பணி ஆணை வழங்கி, பணி மேற்கொண்டதையும் மன்ற அனுமதிக்கலாம்.
</td>
<td><u>தீர்மான எண். 148</u><br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>20</td>
<td>
ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 முதல் 18 வார்டுகளில் உள்ள மினி பவர் பம்ப் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ளும் பணிக்கு தொகை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள , 01.03.2024-இல் மன்ற அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிக்கு 15.03.2024-இல் ஒப்பந்தப்புள்ளிகோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.கே.செந்தில்கண்ணன்</td><td>0.07% மதிப்பீட்டுவிலையில் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.எம்.முத்துக்கண்ணன்</td><td>2.23% மதிப்பீட்டுவிலையில் கூடுதல்</td></tr>
</table>
மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.கே.செந்தில்கண்ணன் ஒப்பந்ததாரரின் 0.07% மதிப்பீட்டு விலை விகிதத்தில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.
</td>
<td><u>தீர்மான எண். 149</u><br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு**<br>மேற்படி பணியின் அவசியம் கருதி, மதிப்பீட்டு விலையில் 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கே.செந்தில்கண்ணன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று, பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். | |
| 21 | ஒட்டன்சத்திரம் நகராட்சி 1-வது வார்டு பொன்னகரம் பகுதியில் புல எண்.411-ல் உள்ள பொதுஇடம் தங்களுக்கு சொந்தமானது எனவும், அவ்விடத்தில், நகராட்சி மூலம் எவ்வித பணிகளும் மேற்கொள்ள கூடாது என தெரிவித்து, திரு.சுப்பிரமணியன் மற்றும் திருசுந்தரம் ஆகியோர்களால், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வழக்கு எண்.OS No.34/2019-ன்படி, வழக்கு தொடர்ந்து வழக்கு நடைபெற்று வந்த நிலையில், மேற்படி வழக்கில் மாண்பமை நீதியரசர் அவர்களால், 20.12.2023-ல் வாதிகள் தொடர்ந்த வழக்கினை தள்ளுபடி செய்து தீர்வுகள் வாதிகளுக்கு ஆதரவாக இல்லை என்பதாலும், வழக்குச் சொத்தில் வாதிகள் அனுபவம் செய்வதை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ எவ்வித தடையும், இடையூறும் செய்யக் கூடாது என்று வாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என வழக்கினை தள்ளுபடி செய்து தீர்ப்புரை வழங்கப்பட்டது. மேற்படி வழக்கில், இந்நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை எதிர்கொண்டு தீர்ப்புரைபெற்று தந்தமைக்கான வழக்கு கட்டணமாக ரூ.10,000/-திரு.கே.முருகேசன், வழக்கறிஞருக்குவழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலககுறிப்பு**<br>மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.734/2019/இ1) | **தீர்மான எண். 150**<br>அனுமதிக்கப்பட்டது |
| 22 | ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 2024-25-ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சி சொத்துவரி, குடிநீர் கட்டணம் மற்றும் தொழில்வரி விதிப்புகளுக்கு 2024-25-ஆம் ஆண்டு கேட்பு அறிவிப்புகள் வரிவிதிப்புதாரர்களுக்கு வழங்கி வசூல் செய்யும் பணி மேற்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சகம் மூலம் அச்சடித்துக்கொள்ள ஆகும் உத்தேச செலவினம்ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு<br>**அலுவலககுறிப்பு** :-<br>மன்றம் அனுமதிக்கலாம்(ந க.எண்.678/2024/அ1) | **தீர்மான எண். 151**<br>அனுமதிக்கப்பட்டது |
| 23 | ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 05.03.2024ம் நாளன்று நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்டத்தில் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்த கூட்டத்திற்கான சிறப்பு ஏற்பாடு செய்த பணிகளுக்கான தொகை வழங்க கேட்டு கீழ்க்கண்டுள்ள நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற பட்டியல்கள் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><table><tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை ரூ.</th></tr><tr><td>1</td><td>ஏ.பி.ஆர்.திரிரோஸ் சவுண்ட் சர்வீஸ், ஒட்டன்சத்திரம்</td><td>74500</td></tr><tr><td>2</td><td>விநாயகா ஸ்டுடியோ அன்டு ஜெராக்ஸ், ஒட்டன்சத்திரம்</td><td>17000</td></tr></table>**அலுவலககுறிப்பு**<br>மேற்படி பணிக்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு நகராட்சி வருவாய் நிதியிலிருந்துமேற்கொண்டதைமன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 152**<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>24</td>
<td>
ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் அரசின் திட்டங்கள் மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் மற்றும் காளாஞ்சிபட்டி பகுதியில் முத்தமிழ் அறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களின் நூற்றாண்டு ஒருங்கிணைந்தபோட்டித் தேர்வு பயிற்சி மையம் திறப்பு விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொளி காட்சி வாயிலாக துவங்கி வைத்ததை ஒட்டன்சத்திரம் நகர்மன்றம் சார்பாக வாழ்த்து தெரிவித்தது முதலான விளம்பர வெளியீட்டினை 14.01.2024, 08.02.2024, 27.02.2024 மற்றும் 04.04.2024 ஆகிய தினங்களில் தினசரி நாளிதழ்களில் விளம்பர வெளியீடு செய்த வகையில், வரப்பெற்ற பட்டியல் தொகையை கீழ்க்காணும் நாளிதழ்கள் நிறுவனங்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ.எண்</th><th>நாளிதழ் பெயர்</th><th>வெளியீடு செய்த நாள்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>தமிழ்முரசு மாலை நாளிதழ்</td><td>14.01.2024</td><td>21000</td></tr>
<tr><td>2</td><td>உள்ளாட்சி சாரல் நாளிதழ்</td><td>08.02.2024</td><td>9975</td></tr>
<tr><td>3</td><td>தினகரன் நாளிதழ்</td><td>27.02.2024</td><td>42840</td></tr>
<tr><td>4</td><td>தினவேல் நாளிதழ்</td><td>04.03.2024</td><td>9990</td></tr>
<tr><td>5</td><td>தினப்புலரி நாளிதழ்</td><td>01.03.2024</td><td>8000</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு :-</u><br>
மேற்படி செலவினத்தை 2024-2025-ஆம் ஆண்டு நகராட்சி வருவாய் நிதியிலிருந்துவழங்கியதைமன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td><u>தீர்மான எண். 153</u><br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>25</td>
<td>
ஒட்டன்சத்திரம் நகராட்சி முன்புறம் 1 முதல் 18 வார்டு பகுதிகளில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 03.03.2024-ல் “தேசிய பல்ஸ் போலியோ சொட்டு மருத்துவ முகாம்-2024” மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் அறிவுரைகளின்படியும், மாண்புமிகு உணவு மற்றும உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மேற்படி முகாமிற்கு தேவையான ஜீமர் பந்தல், சவுண்ட் சர்வீஸ், மேட் மற்றும் பேன் போன்ற பணிகள் மேற்கொண்டமைக்கான தொகை ரூ.19,000/-ஐ வழங்க கேட்டு A.P.R திரிரோஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு.<br>
<u>அலுவலககுறிப்பு :-</u><br>
மேற்படி பணிக்கான செலவினத்தை 2024-2025-ஆம் ஆண்டு நகராட்சி வருவாய் நிதியிலிருந்துமேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்
</td>
<td><u>தீர்மான எண். 154</u><br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>26</td>
<td>
ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமானகுடிநீர் டேங்கர் வாகனம் TN57 AW 5529-க்கான உருளி பட்டைகள் (Tyre) தேய்மானம் அடைந்து குடிநீர் வாகனத்தை பயன்படுத்த இயலாத நிலையுள்ளதால், மேற்படி குடிநீர் வாகனத்திற்கு புதிய உருளி பட்டைகள் (Tyre) 6-எண்ணம் சப்ளை செய்யும் பணிகள் வரப்பெற்ற விலைப்புள்ளிகள்கீழ்க்கண்டவாறு
<table>
<tr><th>வ. எண்</th><th>பொருள்</th><th>HMR Construction, Oddanchatram</th><th>Raj Tyres, Oddanchatram</th><th>Ganapathy Tyres (MRF) Auto parts store, Oddanchatram</th></tr>
<tr><td>1</td><td>MRF Tyre 7.50-16 Rubber Rib Jet R Miles Tyre for</td><td>14850.00 (+ GST)</td><td>15750.00 (+ GST)</td><td>15000.00 (+ GST)</td></tr>
</table>
</td>
<td><u>தீர்மான எண். 155</u><br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | <table><tr><td></td><td>Light Commercial Vehicle and including fixing labour charge<br>(each one tyre)</td><td></td><td></td><td></td></tr></table><br>மேற்படி விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள HMR Construction, Oddanchatram நிறுவனத்திற்கு சப்ளை பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மேற்காணும் பணி மேற்கொள்ள HMR Construction, Oddanchatram நிறுவனத்திற்கு சப்ளை உத்தரவு வழங்கியதையும், அதற்கான செலவினத்தை 2024-2025-ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.. | |
| 27 | ஒட்டன்சத்திரம் நகராட்சி 6-வது வார்டு புல எண்.307/பி2ய மற்றும் 2பி-ல் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மேற்கு பகுதியிலிருந்து பழனிக்கவுண்டன் புதூர் செல்லும் சாலை தனக்கு சொந்தமான நிலம் எனவும், மேற்படி நிலத்தில், நகராட்சி ஆக்கிரமிப்பு செய்து தார் சாலை அமைத்துள்ளதாகவும், ஆக்கிரமிப்பினை அகற்றவும் அல்லது உரிய கிரையத் தொகை வழங்கவும், தவறும்பட்சத்தில் நிலத்திற்கு சமமான வேறு நிலம் வழங்க உத்தரவிட வேண்டி திரு.குழந்தைவேல், த/பெ.பழனிச்சாமி கவுண்டர், கோதைமங்கலம், பழனி என்பவரால் , இந்நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழக்கு W.P.(MD) No.18046/2018-வழக்கு தாக்கல் செய்து நடைபெற்று வந்த வழக்கில் இந்நகராட்சி சார்பாக திரு.T.லெனின்குமார் வழக்கறிஞர் ஆஜராகி வழக்கினை தள்ளுபடி செய்து தீர்ப்புரை பெற்று தந்தமைக்காக வழக்கு கட்டணம் தொகை ரூ.15,000/- மட்டும் வழங்க கேட்டு வரப்பெற்ற பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | **<u>தீர்மான எண். 156</u>**<br>அனுமதிக்கப்பட்டது. |
| 28 | ஒட்டன்சத்திரம் நகராட்சி 1-வது வார்டு குறிஞ்சி நகர் பகுதியில் புல எண்.431/24, 25-ல் திருபி.சக்திவேல், த/பெ.பழனிச்சாமிக்கவுண்டர் மற்றும் திருமதி.ஏ.எஸ்.சுமதி, க/பெ.பி.சக்திவேல் ஆகியோரால் வணிக பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் குடியிருப்பு கட்டுமானம் கட்டிட வரைபடம் அனுமதிக்கு மாறுதலாக கட்டியது தொடர்பாக இந்நகராட்சி மூலம் நகர்ஊரமைப்பு சட்டம் 1971 திருத்தப்பட்ட சட்டம் 61/2008 பிரிவு 85 உடன் படிக்கப்பட்ட பிரிவுகள் 56 மற்றும் 57-ன்படி, கட்டிடத்தை மூடி முத்திரையிடப்பட்ட அறிவிப்பு செய்யப்பட்டதைதொடர்ந்து, மேற்படி கட்டிடத்தில் வாடகைக்கு குடியிருந்து வரும் திரு.பி.சக்திவேல், திரு.எம்.சக்திவேல் மற்றும் திரு.ஏ.செல்லப்பாண்டி ஆகியோர்களால், தங்களால் உடனடியாக வேறு வீடு பார்த்து காலிசெய்ய இயலாது எனவும், கட்டிடத்தை காலி செய்ய ஆறு மாத கால அவகாசம் கோரியும் இந்நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழக்கு W.P.(MD) No.8925/2024 மற்றும் W.P.(MD) | **<u>தீர்மான எண். 157</u>**<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | No.8926/2024-ன்படி, வழக்கு தொடரப்பட்டதை தொடர்ந்து, மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக திரு.T.லெனின்குமார் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி இரண்டு வழக்கினை எதிர்கொண்டமைக்கான வழக்கு கட்டணம் தொகை ரூ.30,000/-மட்டும் வழங்க கேட்டு வரப்பெற்றபட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு<br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | |
| 29 | ஒட்டன்சத்திரம் நகராட்சி அலுவலகத்தில் 13.05.2024ம் நாளன்று காலையில் மின்சாரம் கூடுதாலக வரப்பெற்ற நிலையில், பொதுபிரிவில் இயங்கும் கணினிகள் மற்றும் வசூல் மையத்தில் உள்ள வரி மற்றும் வரியற்ற இனங்களுக்கு கணினியில் வரவாக்கம் செய்து ரசீது எடுக்கும் இயந்திரம் (EPSON Printer) பழுதடைந்துவிட்டது. இந்நிலையில் பணிகளில் தொய்வு ஏற்படுவதுடன் வசூல் மையத்தில் வரி மற்றும் வரியற்ற இனங்களுக்கு வசூல் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்காணும் கணினிகள் / பிரிண்டர்கள் பழுது நீக்கப் பணிகள் மற்றும் வரி வசூல் பணியின் அவசியம் கருதி, புதிய பிரிண்டர் (EPSON Printer) கொள்முதல் செய்துகொள்ள ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.3.00 இலட்சத்திற்குமன்றத்தின் அனுமதிக்கு<br>**<u>அலுவலககுறிப்பு :-</u>**<br>மேற்படி வரி வசூல் மற்றும் அலுவலக பணிகளின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண். 158</u>**<br>அனுமதிக்கப்பட்டது. |
